

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## 'கர்த்தரை தேடுவதே' நம் பாக்கியம்!

தேவனைத் தேடுகிறவன் ஒருவனாகிலும் இல்லை! எனக்கூறும் உலக மாந்தர்கள் மத்தியில், நாமோ கர்த்தர் ஒருவரே நம் கதி எனத் தேட வேண்டும்! இந்த கடைசி நாட்களில் நம்மைச் சூழ, எத்தனை துன்பங்கள், விரோதங்கள்! நாமோ, கர்த்தரைத் தேடுகிறபடியால், அவர் நமக்குச் செய்திடும் முதல் பங்கு "நம் எல்லா பயத்திலிருந்தும் நீங்கலாக்குகிறார்!" என்பதுதான்! (சங்.34:4).

நாம் தொடர்ந்து "இந்த ஏழை கூப்பிட்டான்!" என அவரைத் தொடரும்போது, "அவர் என்னை எல்லா இடுக்கண்களுக்கும் நீங்கலாக்கி இரட்சித்தார்!" என்ற ஆச்சரியம் நம் வாழ்வில் அனுபவமாய் மாறிவிடும்! (சங்.34:6). இதுவே, ஆண்டு முழுவதும் நமக்கு நிகழ வேண்டிய பாக்கியம்!

_tr

பெட்டகம் 23

ஜனவரி 2021

பரல்கள் 01



## ‘பெருமை ஒழித்து’ சாத்தானை வெல்லுங்கள்!

வெவ்வேறான தரத்தின்படி பொல்லாத குணங்கள் இவ்வுலகத்தில் இருக்கின்றன. இருப்பினும், அவை எல்லாவற்றிலும் பெருமையே மிக மிக மோசமானதாகும். பொதுவாக, **இப்பெருமையானது, மற்றவர்கள் மீது தவறான அபிப்பிராயம் கொள்வதிலிருந்தே ஆரம்பமாகின்றது!**

ஓர் இளைய விசுவாசியைத் தேவன் அவ்வளவு சீக்கிரத்தில் உயர்த்தி விடவே மாட்டார். ஏனெனில், அவ்வித உப்பிய நிலையில், சாத்தான் அவனுடன் கைகோர்த்து, அவனை அழித்துவிடுவான் என்பதைத் தேவன் அறிவார் (1தீமோ.3:6). இளைய விசுவாசிகள் ஞானமுள்ளவர்களாய் வளர்ந்திட வேண்டுமென்றால், தங்களின் புத்திக்கூர்மையான காரண உணர்வுகளைத் தள்ளிவைத்துவிட்டு, கர்த்தருக்குள்ளான தங்கள் ஸ்தல சபை மூத்த சகோதரர்களின் புத்திமதியை ஏற்றுக்கொள்ளவும், அவர்கள் ஒழுங்கு செய்து சிட்சிக்கும் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியிருத்தலும் வேண்டும்.

*இவ்வாறாக, உங்களை மாத்திரமே நீங்கள் கண்டு வளர்வதற்குப் பதிலாக, பிறரை நியாயம்தீர்க்கும் இளைஞனாய் இருந்தால், வளர்ச்சி தடைபட்டு, நீங்கள் சாத்தானாகவே முடிவடைவீர்கள் என்பது திண்ணம்!!*

கடந்தகாலத்தில் நீங்கள் எவ்வளவு மோசமாய் வீழ்ச்சியுற்றிருந்தாலும்..... அதை விட்டுத் தள்ளுங்கள்!...... இப்போதிருந்தே ஓர் நல்ல ஆரம்பம்செய்து உங்களை நீங்கள் தாழ்த்துவதில் உறுதியாக "நிலைத்திருந்தால்" உங்கள் வாழ்வில் சொல்லி முடியா மகத்துவங்கள் பரிமளிப்பதும் துவங்கிவிடும்!!

*-Ed*

### 2021 'பரலோக பொக்கிஷங்கள்' – வருட சந்தா

*அநேகர் சந்தாவை புதுப்பித்ததற்கு நன்றி! புதுப்பிக்காதவர்கள்* **பிப்ரவரி 25-ம் தேதிக்குள்** *அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில்* **3** *பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.***125/-** *அயல்நாடு ஒரு பிரதி ரூ.***900/-** *அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள்* **'புதிது'** *என்று குறிப்பிடவும். நன்றி!*

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : **PARALOGA POKKISHANGAL**, 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.), Madurai - 625 018, S.India Cell : 9843049935 Ph: 0452 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## ‘தொழுகையே’ உங்கள் வாழ்வின் பங்காகட்டும்!

**ந**ம் கிறிஸ்தவ ஜீவியத்தில் ‘ஜெபம்’ என்பது, கர்த்தரிடத்திலிருந்து நாம் **ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு** அவரை நோக்கி கரங்களை உயர்த்துவதாகும், அது சரியே! ஆனால், தொழுகை அல்லது ஆராதனை என்பது கர்த்தரிடத்தில் நாம் **ஒன்றை கொடுப்பதாகும்.** நாம், கர்த்தருக்குரிய கனத்தையும்! துதியையும்! அவருக்கு கொடுப்பதாகும். இப்படி ஒரு வல்லமையான **ஆராதனை செயல் ‘நம்முடைய இயலாமையை’ நாம் அறிந்திருக்கும் போது மாத்திரமே நிகழ்ந்திட முடியும்.** அப்போது மாத்திரமே, புத்திக்கு எட்டாத அளவு உயர்ந்து மேன்மையாக நிற்கும் அவரது வல்லமையை நம்மால் காண முடிந்து.... தேவனுடைய மகத்துவத்தைப் போற்றும் தெய்வீக ஆராதனை நம் இருதயத்தில் பொங்கி எழுகிறது!

மெய்யான தொழுகையில், ஜெபம் ஆரம்பமாய் இருந்தாலும், அதன் முடிவோ தொழுகையாய் மாறிவிட வேண்டும். நீங்கள் கர்த்தருடைய ஜெபத்தை கவனித்துப் பார்த்தால், இந்த உண்மையை விளங்கிக் கொள்ள முடியும். “பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே என அழைத்து, அவரது பரிசுத்தத்தை தேடி, நமக்குரிய அன்றாட ஆகாரத்தையும் அவரிடம் கேட்டு, சோதனை நேரத்தில் விளைந்திடும் தீமையிலிருந்து நம்மை இரட்சிக்கும்படியாக **‘நமது இயலாமையை’** அவரிடம் தெரிவித்து .... முடிவாக, இராஜ்ஜியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்” என தொழுகையில் முடிவதைப் பாருங்கள்.

உதாரணமாய், சங்கீதம் 30:6,7-ம் வசனங்களில் தாவீது கற்றுக்கொண்ட தொழுகையை கவனியுங்கள். “நான் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லை என்று என் வாழ்விலே சொன்னேன்! கர்த்தாவே, உம்முடைய தயவினால் நீர் என் பர்வதத்தை திடமாய் நிற்கப் பண்ணியிருந்தீர்” என தேவனிடம் பேசி தாவீது ஜெபித்தார். இவ்வாறு, தாவீது தான் பெற்றிருந்த திடமான வல்லமை அனைத்தும் தேவனுடைய கிருபையினாலும்

அவருடைய பெலத்தினாலும் உண்டானது என்பதையும், தேவனைச் சார்ந்து கொள்ளாமல் ஜெயம் அவருக்கு ஒருபோதும் கிட்டாது என்பதையும் நன்றாகவே அறிந்திருந்தார். ஆகிலும், இதே வசனத்தில் தானே 'தேவனுடைய பெலனை மறந்து' தடுமாறவும் செய்தார்! தொடர்ந்து அதை குறிப்பிடும்போது "கர்த்தாவே நான் உம்முடைய பர்வதத்தைப் போற்றியபோது உம்மில் நிலைநின்றேன். ஆகிலும், உமது வல்லமையை மறந்தபோது உமது முகத்தை எனக்கு மறைத்துக் கொண்டீர்...... இப்போது நான் கலங்கி நிற்கிறேன்" என தேவனுடைய பாதத்தில் நொறுங்குண்டு விழுந்தார் (வச.7).

**இங்குதான் தொழுகையின் ஆரம்பமான நொறுங்குண்ட இருதயத்தை தாவீது பெற்று, புழுதியில் தன் முகத்தை வைத்து, கர்த்தரை தொழுது கொண்டார்.**

1கொரி.10:13-ம் வசனம் நமக்கு விளங்கச் செய்யும் சத்தியம் யாதெனில், மானிடர்களாகிய நம்மில் ஒருவராகிலும் "பூரண வெற்றியை" (Absolute Victory) அடைந்திடவில்லை என உரைத்திடும் சத்தியமேயாகும். ஆகிலும் 'கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் வெற்றி சிறந்து' வாழ்கிறோம். இங்கு காணும் சத்தியத்தை 'விளங்க முடியாதது' என எதுவும் இல்லை. எப்படியெனில், நாம் அடைந்த அனைத்து ஜெயமும் "நம் திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படுவதற்கு அவர் இடம் தரவில்லை!" என்ற அவருடைய மகா உத்தமமேயாகும். சோதனையை நம்மால் எவ்வளவு தாங்க முடியும்? என்பதை அவர் ஒருவரே சரியாக அறிந்து வைத்திருக்கிறார்!

**இவ்வாறு நம்முடைய சோதனைகளை 'எடை போட்டு' நாம் தாங்கக்கூடிய அளவிற்கு மாத்திரமே அதை அவர் நமக்குத் தரவில்லையென்றால், நாம் அனைவருமே தோல்வி அடைந்திருப்போம்! இந்த உண்மையை உங்களால் உணர்ந்து ஏற்றுக்கொள்ள முடியுமென்றால், அதுவே கர்த்தருக்கு முன் உங்களைத் தாழ்த்தி ஆராதிக்கும் தொழுகையாகும்!**

இந்த இடத்தை தழுவிக் கொண்ட எவர்களும் யூதா 25-ம் வசனத்திற்கு உரியவர்களாய் "நம்முடைய இரட்சகரான **தேவனுக்கே** கனமும், மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும், இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக ஆமென்" என **தொழுதிடும் பாக்கியம்** பெற்றிருப்பார்கள். இன்னும் அதிகமாய், புனிதமான இந்த தொழுகைக்குப் பாத்திரமாய் இருப்பவர்கள் வெளி.7:12-ம் வசனத்திற்கு உரியவர்களாய், எக்காள முழக்கத்தோடு "எங்கள் தேவனுக்கு துதியும்! மகிமையும்! ஞானமும்! ஸ்தோத்திரமும்! கனமும்! வல்லமையும்! பெலனும்! சதா காலங்களிலும் உண்டாவதாக, ஆமென்" என, தாழ்பணிந்து **தொழுகை செய்தார்கள்.**

*யோபு சந்தித்த கொடிய துன்பங்கள் அனைத்தையும் நாம் அறிவோம். ஜனங்கள் அவனைச் சூழ நின்று "உன் பிள்ளைகள் அனைவரும் மரித்துப் போனார்கள்! உன்னுடைய வீடு முழுவதும் தகர்ந்து போனது! உன்னுடைய ஆஸ்திகள் அனைத்தும் கொள்ளையாடப்பட்டது! என்ற சேதியை கூறினார்கள். அப்போது யோபு என்ன செய்தார் தெரியுமா? இழப்பிற்கு உள்ளான, எதற்காகவும் அவர் ஜெபிக்கவில்லை! அதற்குப் பதிலாக முகங்குப்புற தூசியில் விழுந்து, கர்த்தரை தொழுது கொண்டார்!*

**தூசியில் தன் நிர்ப்பந்தமான நிலையை *யோபு* உணர்ந்ததினால் மாத்திரமே, கர்த்தரை தரிசித்து அவரைத் தொழுது கொள்ளும் பாக்கியம் பெற்றார்!**

*அந்த மன கிலேசத்தில், "என்ன நடந்தது? ஏன் நடந்தது?" என்றெல்லாம் கேள்வி கேட்காமல் "நம் தேவனுக்கே சகல ஞானமும், சகல துதியும் என்றென்றும் உண்டாவதாக!" என கர்த்தருடைய பாதத்தை தொழுது இறுகப் பிடித்துக்கொண்டார்.*

*இடைவிடாது ஜெபிக்கும் இரகசியத்தைப் புரிந்து கொண்ட எந்த பக்தர்களும் "இடைவிடாது கர்த்தரை தொழுது கொள்ளும் மேன்மையை" நிச்சயமாய் கண்டடைந்திருப்பார்கள்! நம் வாழ்வின் எல்லா சோதனைகளிலும், தேவைகளிலும், ஜெபித்து முன்னேறும் யாவருக்கும் இந்த இனிமையான 'இடைவிடாத தொழுகையின் பாக்கியம்' கிட்டுவதாகும். கர்த்தருடைய பாதத்தைத் தொட்டு தொழுதிடும் பாக்கியம் இன்னதென்று அறியாத நாம்..... இப்போதோ, "தொழுகையே எல்லாம்!" என்ற புனித எல்லையை இந்த பூமியிலேயே கண்டடைகிறோம். ஆம், அது ஒன்றே கிறிஸ்தவ வாழ்வில் நாம் பெற்ற பாக்கியம்!*

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

---

## கூவி அழைக்கும் "சுவிசேஷ பணி" சபையில் மங்குவது சரியோ?

*தற்கால சபைகளில் எங்கு பார்த்தாலும்* **விசுவாச துரோகம்** *காணப் படுகிறது. அநேகர் விசுவாசத்தை மறுதலித்து விழுந்து போயிருக்கி றார்கள்! அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களும், பட்டம் பெற்ற குருமார்களும், பிரசங்க மேடையில் பேசும் விஷயங்கள், அவர்களின் வீழ்ச்சியுற்ற விசுவாச துரோகத்திற்கு ஒத்ததாகவேயிருக்கிறது!* **களங்கமில்லாத சுவிசேஷத்திற்கு ஏற்பட்டுவிட்ட துரோகங்களை** *காணும் உத்தம தேவனுடைய தாசர்கள், சீர்கெட்ட ஆத்துமாக்களை மாற்ற, வல்லமையுள்ள சத்தியங்களைச் சத்தமிட்டுக் கூறவேண்டிய காலம் இது என்றே துரிதமடைய வேண்டும்!*

“இதோ, இருள் பூமியையும் காரிருள் ஜனங்களையும் மூடும்” என ஏசாயா உரைத்த காலமே நமது காலமாயிருக்கிறது (ஏசாயா 60:2). ஆண்டவர் அருளும் ஆத்தும இரட்சிப்பைக் குறித்த விஷயத்தில், உலகத்திலுள்ள ஜனங்கள் முழுவதும் அந்தகாரத்திலேயே அமிழ்ந்து போயிருக்கிறார்கள் என்பது தெளிவு! சிற்சில ஆலயங்களில் மட்டுமே சுவிசேஷம் நேர்மையாய் பிரசங்கிக்கப்பட்டு மனந்திரும்புதல், மறுபிறப்பு, இரட்சிப்பு தெளிவாய் காட்டப்படுகிறது! ஜனங்கள் ஆண்டவரிடம் வந்து மெய்யான இரட்சிப்படைய அழைப்பும் கொடுக்கப்படுகிறது! ஆனால், அநேக ஆலயங்களில் ‘குணப்படாத கிறிஸ்தவர்களைக் கொண்டு’ ஆராதனைகள் வழக்கம்போல் ‘மாமூலாய்’ நடந்து வருகிறது!

**எங்கள் சபையார் எல்லாரும் இரட்சிக்கப்பட்டவர்கள் என்றும், மோட்சம் போக தகுதியுள்ளவர்கள் என்றும் போலியாக கருதியே இன்றைய சபைகளில் பிரசங்கம் செய்யப்படுகிறது! ஆனால், இதுபோன்ற சபைகளில் மறுபிறப்பு அடையாதவர்களே மிகுதியாய் இருக்கிறார்கள்!**

இவ்வித சீர்கெட்ட சபைகளுக்கு அளிக்கப்படும் ‘தாலாட்டுப்’ பிரசங்கங்கள் ஒழிந்து, “விரியன் பாம்பு குட்டிகளே.... மனந் திரும்புங்கள்” என உரைத்திடும் பிரசங்கமே இன்றைய தேவையாய் இருக்கிறது!

ஜான் பனியன், பேக்ஸ்டர், ஜலீன், எட்வர்ட், வெஸ்லி, ஒய்ட்பீல்டு, பின்னி, பில்லிகிரஹாம்.... முதலியவர்கள், பாவத்தைக் கண்டித்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையில், பாவிகள் தங்கள் பாவபாரத்தை உணர்ந்து, அழுது மனந்திரும்பினர். இன்றும், மனந்திரும்பிட அழைக்கும் தெய்வ பக்தி நிறைந்த தாசர்களையே கர்த்தர் நம் மத்தியில் எழுப்புவாராக! இந்த கடைசி காலத்தில், பிரசங்கிமார்கள் ஜனங் களைக் குளிரச் செய்யும் செய்திகளை ஒழித்து, சத்திய வேதத்திலுள்ள மிக முக்கியமும் அவசியமுமான சத்தியங்களையே “**அபிஷேக நிறைவோடு**” பயமின்றி கூறி அறிவிப்பார்களாக! கலப்படமில்லாத இயேசுவின் சுவிசேஷமே இக்காலத்திற்கு இன்றியமையாத தேவை!

இன்றைய சபைகளில் மிகுதியான நேரம், உபதேச தர்க்கங்களுக்கு செலவழிக்கப்படுகின்றன. தர்க்கங்களால் பயன் ஒன்றும் இல்லை! சத்திய வேத கொள்கைகளில் நீங்கள் உறுதி பூண்டு நில்லுங்கள், அதுபோதும்! நாம் அதை பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லை. மாறாக, வீறுகொண்டெழுந்து அவைகளைக் கூவி அறிவிக்க வேண்டியது மாத்திரமே நமது கடமை! சத்திய வேதம் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும். அதை எதிர்க்கிறவர்கள், எதிர்த்தால்

*எதிர்க்கட்டும்! அவர்களின் சுவாசமாகிய காற்று நீங்கிப்போகும். ஆனால், சத்தியமோ நிச்சயமாய் நிலைத்திருக்கும்!*

*ஒருகாலத்தில், சுவிசேஷ ஒளி மிளிர்ந்த வட ஆப்பிரிக்காவில் மார்க்கபேத தர்க்கங்களால், அந்த நாட்டில் பிரகாசித்த சுவிசேஷ ஒளி அணைந்துபோனது! தங்களுக்குள் "***சுவிசேஷ ஒளியை***" பாதுகாக்காமலும், அதை அறிவிக்காமலும் இருந்தால், நம் தேசத்திலும் அவ்வாறே நடைபெறும்!*

**நாம் அனைவரும் சுவிசேஷ தாகத்தாலும், அதைப் பிரகடனம் செய்யும் ஒரே நோக்கத்தாலும் ஐக்கியப்பட்டு, ஆவியின் ஒருமைப்பாட்டில், சுத்த சுவிசேஷத்தை உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் பிரசங்கிப்போமாக! சுவிசேஷத்தின் சம்பூரணத்தை நீங்கள் எத்தனை அதிகம் பெற்றிருக்கிறீர்களோ, அத்தனை அதிகம் ஆத்தும பாரமும், பிறரைக் குறித்த பொறுப்பும் உங்களுக்கு ஏற்பட்டு விடும்.**

*இன்றைய துயரமோ, சுவிசேஷத்தின் சம்பூரணத்தை வாஞ்சையுடன் அனுபவிக்காத கிறிஸ்தவ விசுவாசிகளே எங்கும் இருக்கிறார்கள்! இவர்களின் ஜீவிய பொக்கிஷசாலை தரித்திரமாய் இருக்கிறபடியால், பிறருக்கும் 'தரித்திரத்தையே' கொடுக்கிறார்கள். ஆத்தும இரட்சிப்பிற்கு, ***சுவிசேஷமே தேவபெலனாயிருக்கிறதென்று*** நாமெல்லாரும் விசுவாசிக்கிறோமே! தேவ பெலனான அந்த சுத்தாங்க சுவிசேஷத்தை நிறைவாய் பெற்று, நாம் அறிவிப்போமாக!*

*சத்திய வேதத்தில் கூறியிருக்கிறபடி, நாம் லவோதிக்கேயா சபையின் காலத்திலிருக்கிறோம். ஆக, நமது சபைகளுக்கே பரிசுத்த சுடரின் சுவிசேஷம் அதிகம் தேவைப்படுகிறது. உலகத்தை விட்டுப் பிரிந்து, இரட்சகர் இயேசுவிடமே முழுமனதோடு பக்தி செலுத்த வேண்டுமென்று, நமது சபைகளுக்குப் புத்தி சொல்ல வேண்டும். உலகத்தோடு ஒத்து நடக்கும் ஒரு சபையில், ***உண்மையாய் மறுபிறப்படைந்த*** ஒரு மனிதன் தரித்திருக்க மாட்டான். சத்தியத்திற்கு மாறுபாடான சமரசப்போக்கை, தேவனுடைய வசனம் கண்டனம் செய்கிறது! லௌகீக சமரசமும், பாவ அந்தகாரமும் தூய சபைகளிலிருந்து அகற்றப்பட வேண்டும்! ஐக்கியம் வேண்டும்.... ஆனால், விசுவாச துரோகத்தை எதிர்க்கவே ஐக்கியம் வேண்டும்!!*

*பெலவீனமான இந்த நாட்களில்தான், சத்துரு நம்மேல் பாய்கிறான். சீறும் புயல்காற்று, நல்ல அஸ்திபாரங்களையே அசைக்கத் துவங்கி விட்டது! பரிசுத்தாவியானவரின் பலத்தைக் கொண்டு சுத்தாங்க சுவிசேஷத்தை வீறுகொண்டு அறிவிப்பதினாலேயே,*

*அழித்திட வகை தேடும் அந்தகார அலைகளை அமர்த்த முடியும்! சுத்த மனசாட்சியின் உறுதியோடு, நாம் ஜனங்களிடம் சென்று, சுவிசேஷப் பாட்டுகளைப் பாடி, நல்ல சாட்சி கூறி, கிறிஸ்துவின் நற்செய்திகளை மனதார எடுத்துரைத்து.... கிறிஸ்துவற்ற கூட்டத்தினரை நமது பக்கமாக கிறிஸ்துவுக்குள் இழுத்துக் கொள்வோமாக!*

**கிறிஸ்தவர்களும் 'நம்மைப்போலவே சீழ்பிடித்தவர்கள்' என எண்ணி யிருக்கும் அவர்களின் மனப்போங்கை, நமது பரிசுத்த ஜீவியத்தின் ஒளியால் அகற்றி, ஆத்துமாக்கள் நம் ஆண்டவரிடம் வாஞ்சையோடு வரும்படி, அவர்களை ஆதாயம் செய்வோமாக!!**

*நீங்கள் எப்போதாவது நீதி.24:11,12-ஐ வாசித்திருக்கிறீர்களா? "மரணத்திற்கு ஒப்புவிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப் போகிறவர்களையும் விடுவிக்க கூடுமானால் விடுவி! அதை அறியோம் என்பாயாகில், இருதயங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ? உன் ஆத்துமாவைக் காக்கிறவர் கவனியாரோ? அவர் எந்த மனுஷனுக்கும், அவனவன் கிரியைக்குத்தக்கதாக பலனளியாரோ?" என வாசிக்கிறோம்.*

*இத்தனை தீர்ப்பான வசனங்களை வாசித்த பிறகும், யார் உணர்வடையாமல் இருக்க முடியும்? இதுவும் வேதத்தில் நாம் காணும் முக்கிய செய்தியல்லவா? மனிதர்களுக்கு வரும் ஆபத்தை நாம் அறிந்தும், அதை அவர்களுக்குக் கூறி அறிவிக்காவிடில், அக்குற்றம் நம்மைச் சார்ந்ததே!*

**எனக்குத்தான் இரட்சிப்பு, அவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது எனச் சொல்லுவதில் பயன் ஏதுமில்லை! இவ்வித சாக்குப் போக்கை நம் ஆண்டவர் ஏற்றுக்கொள்ளார். நாம் சத்தமிட்டுகூவி அறிவிக்க வேண்டிய காலம் இதுவே!**

*அவர்கள் ஆத்துமாவிற்கு வரும் ஆபத்தை கண்டிப்பாய் தெரிவிக்க வேண்டும். நிர்விசாரங்கொண்டு, அப்படி நாம் செய்யாது போனால், அந்த ஆத்துமாக்களைக் குறித்த இரத்தப்பழி நம்மேல் சுமரும்!*

*உத்தம கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்பவர்கள், உறக்கம் தெளிய வேண்டும்! இதுவே நாம் அனைவரும் செய்ய வேண்டிய காரியம்! உங்களைச் சுற்றியுள்ள ஜனங்கள் அழிந்துபோவதற்கு நீங்களே உத்திரவாதிகளாகாதபடி கர்த்தர்தாமே இவ்விஷயத்தில் நம்மெல்லா ருக்கும் தெளிந்த புத்தியையும் பிரகாசமான மனக்கண்களையும் தந்தருளுவாராக! விதைக்கிறவனுக்கே விதை அளிக்கப்படும்! கொடுப்பவன் ஜீவனே, பரிபூரண ஜீவன் பெறும்!! ஓங்குக புனிதமான சுவிசேஷ பணி!*

*– ஆஸ்வால்ட் ஜே . ஸ்மித்*

## "சிலுவைக்குப் பிறகு, மலர் கிரீடம் " என்றுரைத்த ஆண்டவர்!

என் வாழ்வின் இரண்டாவது அத்தியாயமாக, பாரீஸ் நகரத்திலுள்ள "புதுமுறை" கத்தோலிக்க ஸ்தாபனத்திற்குள் பிரவேசித்தேன். அவ்வாறு பிரவேசித்த முதல் நாள் கொண்டு, கர்த்தர் என்னை பத்திரமாய் பாதுகாத்து நடத்தினார். என் சொந்த நகரத்திலிருந்ததைக் காட்டிலும் 'முற்றிலும் அர்ப்பணம்' என் ஜீவியத்தோடு ஊழியப் பங்காய் மாறியதையும் கண்டேன். முன்பைவிட, இப்போதைய நடை உடைகள் மிக எளிமையாய் வாழ்ந்திட கற்றுக்கொண்டேன். நான் மிக அதிகமாய் நேசித்த என் குடும்பத்தை 'யாதொரு காரணமும் இல்லாமல்' நானாக எப்படி அவர்களை விட்டு வெளியே வந்தேன் என்பதை அறிவதற்கு இன்றுவரை ஒரு காரணமும் எனக்குத் தோன்றவில்லை!

புதிய கத்தோலிக்க ஸ்தாபனத்திலிருந்த 'நோட்டரி' என அழைக்கப்பட்ட ஒருவர் அங்குள்ள மக்கள் அனைவரிடமும் **ஸ்தாபன-உறுதிசாசனத்தை** அவர்களின் கையொப்பத்துடன் எழுதி வாங்கிக் கொள்வார். அந்த உறுதிசாசனத்தை நான் வாசித்தபோது, என் மனதில் அதிகமாய் விசனப்பட்டேன்.

**இன்னும் அதிகமாய் அந்த ஸ்தாபன நோட்டரி அதிகாரி, என் வாழ்க்கை யையும், என் ஊழியத்தையும் முடிவுவரை தீர்மானித்து, அதற்கு சாசனம் எழுதிக் கொடுத்து, நான் கையொப்பம் இடவேண்டும் என்ற நிர்பந்தத்தைக் கண்டு சலனமடைந்தேன்!**

நான் சஞ்சலமடைந்து, வெகுவாய் தயங்குவதைக் கண்டு, அந்த உறுதிசாசனம் எழுதி வாங்குபவர் ஆச்சரியப்பட்டார். இச்சமயத்தில், தலைமை கார்னியர் சகோதரி அங்கு வந்து நின்றார்! அவர் அந்த உறுதிசாசனம் எழுதி வாங்குபவரிடம் "மேடம் குயானை குறித்து நீங்கள் யாதொரு உறுதிசாசனமும் எழுத தேவையில்லை! **திவ்ய நடத்துதலின்படியே இங்கு வந்துள்ளார்!** காகிதத்தில் எழுதுவதைவிட, தேவனுடைய ஆவியினால் இவர்கள் எழுதப்பட்டு உறுதி செய்யப் பட்டுள்ளார், அதுபோதும்" என கூறியது கேட்ட சாசன எழுத்தாளர் இன்னும் அதிகமாய் ஆச்சரியப்பட்டார். இது ஒரு நூதன அனுபவ மாய் எனக்கு தென்பட்டது. இந்த நல்ல ஆரம்பம் 'முடிவு வரை' தேவ சித்தத்தில் என்னை காத்துக்கொள்ள உதவியதை நான் கண்டிருந்தேன்!

நான் தங்கிய வீட்டில் எனக்கு பணி செய்வதற்கென இரண்டு பெண்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அவர்களோ நான் கேட்டுகொண்ட எதையும் எனக்குச் செய்யவில்லை. இந்நிலையில்

அவர்கள் இருவரும் என்னோடு இருப்பதில் எனக்கு தயக்கம் ஏற்பட்டது. நானாக அவர்களைவிட்டு விலகியிருந்தால் கன்னி மாடத்தைவிட்டே நான் போய்விட விரும்புவதாக அவர்கள் நிச்சயமாய் முறையிட்டிருப்பார்கள். அந்நிலையில் என்னை அவர்கள் விலக்கி வைத்திடவும் முடியும். ஆனால், அவர்களே பிரான்ஸ் நாட்டிற்கு திரும்பிச் சென்றுவிட்டார்கள். கன்னிமாடத்திற்கு என்னுடைய ஒரே மகளையும் இரண்டு பணிப்பெண்களையும் அழைத்து வந்திருந்தேன். என் அரண்மனையில் எனக்கிருந்த கோச் - வண்டியை அங்கேயே விட்டு வைத்திருந்தேன். அப்படியிருந்தால், நான் இன்னமும் என் அரண்மனையில்தான் இருக்கிறேன் என்ற தோற்றம் உண்டாகுமே என கருதி "மேலன் - (Melun)" என்ற இடத்திற்கு கோச் - வண்டியை எடுத்து வரும்படி கூறியிருந்தேன். அதைக் கொண்டு வருவதற்கு, என் மகளோடு மேலன் செல்வதற்கு ஒரு படகை அமர்த்தியிருந்தேன்.

படகில் பயணித்த என் மகள், ஆற்றில் படர்ந்திருந்த நாணல் புல்லை வெட்டித் தரும்படி படகோட்டியிடம் கேட்டு வாங்கிக் கொண்டாள்.

**அந்த நாணல் புல்லை வைத்து, என் மகள் வேக வேகமாய் ஏராளமான சிலுவைகளை கோர்த்து வைத்தாள். அது சுமார் 300 சிலுவைக்கு மேலாகவே இருக்கும். என் மகள், சற்றும் தயங்காமல், தொடுத்த அந்த சிலுவைகளை எனக்கு மாலையாக அணிவித்தாள். அவளின் அந்த செயல் 'அர்த்தமுள்ளதாய்' என் உள்ளத்தைக் கவர்ந்தது!**

இந்த ஸ்தலத்தில், நான் ஏராளமான சிலுவைகளை ஏற்று அனுபவிக்கப் போகிறேன் என்ற உண்மையை, தேவன் எனக்கு உணர்த்துவதாய் இருந்தது! இந்த மகள் மூலமாய் மாலையிடப்பட்ட சிலுவைகளை 'ஒன்றன்பின் ஒன்றாய்' நான் அனுபவிக்க வேண்டும் என்ற உறுதி என் உள்ளத்தில்பட்டது. அருகில் அமர்ந்திருந்த கார்னியர் சகோதரி, என் மகளிடம் திரும்பி "அழகு பெண்ணே, எனக்கும் சில சிலுவைகளை தரக்கூடாதா?" என வேண்டி கேட்டார்கள். என் மகளோ, "உங்களுக்கு எதுவுமில்லை..... எல்லாம் என்னுடைய அன்புள்ள அம்மாவுக்குத்தான்!" எனக் கூறி மகிழ்ந்தாள். படகு சற்று தூரம் கடந்ததும் ஆற்றில் மிதந்த பல வண்ண மலர்களை அள்ளி எடுத்துக்கொண்டாள். அந்த நாணல் கொடியை வைத்து சிலுவையை தொடுத்ததைப் போலவே, அந்த மலர்களை அழகுபட தொடுத்தாள். அதை ஒரு சிறுவட்டமாக பின்னி முடித்தாள்!....

**அதை எடுத்துக் கொண்டு, புன் சிரிப்போடு என்னிடம் வந்து, என் தலையில்**

வைத்து "அம்மா, சிலுவை மாலைக்குப் பிறகு, இந்த பூக்கிரீடம் உங்களுக்கு சூட்டப்படுவது, மிக அழகாய் இருக்கிறது!" என கூறினாள்.

இந்த நிகழ்ச்சியை, என் உள்ளத்தில் மகிழ்வுடன் ஏற்று, "தேவனுடைய தூய அன்பிற்கு" என்னை பலியாக ஒப்புக் கொடுத்தேன்! மேலும் "என் அன்பு தேவனே, உமக்கென எந்த தியாகத்தையும் மனப்பூர்வமாய் செய்திட என்னை மீண்டுமாய் உம் பாதத்தில் அர்ப்பணிக்கிறேன்" என கண்ணீர் மல்க, என் கர்த்தாவிடம் வேண்டிக்கொண்டேன்!

– மேடம் குயான்

---

## சபையில் 'பற்றியெரியும் அக்கினி' குன்றிவிடக் கூடாது!

தேவன் இந்த உலகத்தை அன்புகூர்ந்து, உலகத்திலுள்ள எல்லோருக்கும் தன்னிடம் உள்ள அனைத்தையும் தந்துவிட்டார். இனி கொடுப்பதற்கென அவரிடத்தில் ஒன்றுமில்லை! பாவிகளுக்காய் தன் **ஒரேபேறான குமாரனைத்** தந்தருளினார்! தேவ வசனமாகிய 'புனித வேதாகமத்தை' தந்தருளினார்! **பரிசுத்தாவியை** தந்தருளினார்! அவரைக் கொண்டு, உலகத்தின் பாவங்களை உணர்த்தவும், தன் சபையை சீர்ப்படுத்தி கட்டவும் செய்கிறார்! இப்படி, தன்னிடமுள்ள எல்லாவற்றையும் தேவன் கொடுத்து விட்டார். ஆனால், இத்தனையும் அடங்கிய இந்த காசோலைக்கு, உரிமையாளர் கையெழுத்து இல்லையென்றால் என்ன பிரயோஜனம்? அதுபோலவே, ஒரு ஆரம்ப நிலையில் வளரும் சபை கூட்டம் எவ்வளவு சிறப்பாய் இருந்தாலும், **அங்கு உயிர்த்தெழுந்த ஆண்டவர் வாசமாய் இல்லையென்றால், அந்த சபை கூட்டத்தினால் என்ன பிரயோஜனம்?**

சத்திய வேதத்தை அநேகர் சரியாய் பகுத்தறிவதில்லை. உதாரணமாய் "இதோ வாசற்படியில் நின்று தட்டுகிறேன்" என்ற வசனத்தைப் பாருங்கள் (வெளி.3:20). இந்த வசனம் பாவிகளுக்கோ அல்லது காத்திருக்கும் இரட்சகருக்கோ கூறப்பட்டதல்ல! இது, நம் ஆண்டவர் அவருடைய சொந்த லவோதிக்கேயா சபையின் வாசலுக்கு வெளியே நிற்கும் அவலமான காட்சியேயாகும். இதை நிறுத்தி வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்! இன்றுள்ள திரளான ஜெப கூட்டங்களில் "என்னுடைய நாமத்தினாலே எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் கூடி வருகிறார்களோ அவர்கள் நடுவிலிருக்கிறேன்" என இயேசு கூறிய வசனத்தை தாராளமாய் பயன்படுத்துகிறார்கள். உண்மை என்னவென்றால், "கர்த்தர் அவர்கள் நடுவில் இல்லை.... வாசலுக்கு வெளியே நிற்கிறார்". கூட்டங்களில், கர்த்தரை துதிக்கிறார்கள், துதிக்குப் பாத்திரரோ புறக்கணிக்கப்பட்டு விட்டார்!

**தங்கள் புத்தக அலமாரிகளில் புத்தகங்களை அடுக்கி வைத்து, தங்கள் வேதாகமத்தை கோடிட்டு அதில் தாங்கள் விரும்பும் குறிப்புகளை எழுதி வைத்துக்கொண்டு.... இப்படிச் செய்கிறபடியால், எக்காலமும் மாறாத தேவனுடைய வார்த்தையின் அனலை, தங்களை விட்டு தள்ளி வைத்து விடுகிறார்கள்!**

*நம் நாட்களில் காணும் 'கடின இருதயமான பாவிகளிடம்' கர்த்தர் எவ்வளவு பொறுமையாயிருக்கிறார் என்பதைக் குறித்து யாதொரு வியப்பும் எனக்கு இல்லை. ஏனென்றால், மானிடர்களாகிய நாமே, 'குருடும் செவிடுமான மனிதர்களிடம்' பொறுமையை காட்டுகிறோ மல்லவா? அது ஏனென்றால், அவர்கள் பாவிகளாயிருக்கிறார்கள் என்பதுதான்! ஆனால், தூங்கி வழிந்து சோம்பேறியாய் இருந்து, சுயநலமாய் வாழும் சபையின் மீது கர்த்தர் தமது நீடிய பொறுமையை இன்னமும் வைத்திருப்பதைக் காண்பதே நமக்கு மிகுந்த ஆச்சரியமா யிருக்கிறது.* **கெட்டுபோன உலகில் 'கெட்டுபோன சபை' காணப்படுவதே தேவனுடைய துயரமாயிருக்கிறது!**

*எல்லாவற்றையும் இழந்து, கண் சொருகிப்போன குருடர்களா யிருக்கும் விசுவாசிகள், தங்கள் கௌரவத்தை மேன்மை பாராட்டிக் கொள்வதை நாம் எதற்கு ஒப்பிடக்கூடும்? தாங்கள் நிர்வாணமா யிருந்தும், அதை அறியாமலே இருக்கிறார்கள்! இந்த உலகத்தில், எப்போதும் இல்லாத அளவிற்கு அநேக எலக்ட்ரானிக் சாதனங்களை உடையவர்களாய் 'ஐசுவரியவான்களாயும்' இருக்கிறார்கள்! ....ஆனால், எப்போதும் இல்லாத அளவிற்கு தெய்வ வல்லமையில் குறைந்து தரித்திரர்களாய் நிற்கிறார்கள்!*

**இதுபோலவே ஆவிக்குரிய ஜீவியத்திலும், ஒன்றும் குறைவுபடாததைப் போல் காணப்படுகிறோம்..... ஆனால், அப்போஸ்தல சபைகளில் காணப்பட்ட அனைத்தையும் நாம் இழந்து விட்டோம்! இவ்வாறு ஆவிக்குரிய நிர்வாணத்தின் வெட்கத்தை சிறிதும் உணராமல் 'ஆராதனை' என்ற பெயரில் ஆர்ப்பரித்துக் கொண்டாடும் ஜனத்தின் நடுவில் இயேசு நிற்பாரா?**

*"பரிசுத்த அக்கினி" அது ஒன்றே, இன்று நம்முடைய தேவை! நம்முடைய ஆலய பலிபீடங்களில், பாவிகளை உணர்த்தி மனந் திரும்பச் செய்யும் பரிசுத்தாவியின் வல்லமை எங்கே? இன்றுள்ள சபைகள் 'குளிர்சாதனம் கொண்டு' குளிர்ச்சி குதூகலம் தேடுகிறார்கள்! இதுவா நமது நாட்டம்?* **"அக்கினிமயமான ஜெபத்தின் ஜெயமல்லவோ, சபையின் ஆர்வமாய் இருந்திருக்க வேண்டும்!"**. *நம் தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார். தேவனையும் அக்கினியையும் ஒருபோதும் பிரிக்க இயலாது. எல்லா மனிதர்களுக்கும் 'அக்கினி' உண்டு.*

*பாவிகளாய் தொடர்ந்து ஜீவிப்பவர்களுக்கு நரக அக்கினி உண்டு! விசுவாசிகளின் கூட்டத்திற்கு நியாயத்தீர்ப்பின் அக்கினி உண்டு! ஆனால், இன்று சபை பரிசுத்தாவியின் அக்கினியை இழந்தபடியால், திரள் கூட்ட விசுவாசிகள் 'பின்மாற்றத்தில்' நரக அக்கினிக்கே திருப்பி அனுப்பப்படுகிறார்கள்!*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

---

## 'சலசலப்புகளில்' சலனப்படாது வாழ்பவன், கிறிஸ்தவன்!

*இன்று அநேகர் தங்களைச் சுற்றிலும் 'பாத்திர ஓசைகள்' போன்ற தொந்தரவிலிருந்து விடுபட்டால்தான், தேவ பிரசன்னத்தைப் பெற்றிட முடியும் என எண்ணுகிறார்கள்! இது எவ்வளவு பெரிய தவறு!! தொந்தரவு, பாத்திர பண்டங்களிலோ அல்லது மற்ற ஜனத்திடமோ இல்லை.... மாறாக, இவர்களேதான் இவர்களுக்குத் தொந்தரவா யிருக்கிறார்கள்!*

**பாத்திர பண்டங்களின் ஓசையிலிருந்து தேவன் நம்மை விடுவிக்கப் போவதில்லை. ஆனால், இவைகளின் மூலமாய் உண்டாகும் பிரதிபலிப்பு களிலிருந்து, அவர் நம்மை நிச்சயம் விடுவிக்க முடியும்!**

*நம்மைச் சுற்றிலும், வெளியே உள்ள சத்தம் எவ்வளவு இருந்தாலும்* **நாம் நொறுக்கப்பட்டுவிட்டால்,** *நமக்குள்ளிருந்து மாறு பாடான பிரதிபலிப்பு எதுவும் தோன்றாது. நம்முடைய வெளிப்புற கடின ஓடு ஆண்டவரால் உடைக்கப்பட்டபடியால், எந்த சத்தத்தையும் கேட்காதவர்கள் போலவே நம்முடைய பிரதிபலிப்பு இருக்கும். இவ்வாறு நாம்* **தேவனுடைய சமூகத்தில் தொடர்ச்சியாய் இருக்கிறபடியால், அவருடைய சமூகத்தை அவ்வப்போது தேடுகிற நிலை நமக்கு ஏற்படாது!**

*இன்னும் ஒரு மாறுபட்ட சூழ்நிலையை எடுத்துப் பாருங்கள். இப்போது, நாம் ஒரு சகோதரனை கடிந்து கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. உணர்வுள்ள மனச்சாட்சியைப் பெற்றிருக்கும் எந்த சகோதரனுக்கும் இவ்வித செயல் அவ்வளவு எளிதானதல்ல. நாம் பொதுவாய், இவ்வாறு ஓர் சகோதரனிடம் கண்டித்துப் பேசுவதை விட, நம்முடைய* **மனுஷீக இரக்க குணத்தை** *அப்பியாசித்து அந்த சகோதரனிடம் எதுவும் சொல்லாமல் இருக்கவே விரும்புகிறோம்! ஏனென்றால், கடிந்து பேசும்போது நாம் எளிதில் பாவம் செய்திடக் கூடும் என அஞ்சுகிறோம்! ஆகவே தேவசித்தத்தின்படி ஒருவரை கடிந்து கொள்வது அவ்வளவு எளிதல்ல என்பதை நாம் யாவருமே அறிந்திருக்கிறோம்!*

**ஆனால், தன்னுடைய ஆத்தும வாழ்க்கை உடைபடுவதை அறிந்திருக்கும் ஒரு சகோதரன், தன்னுடைய ஆவியில் எவ்வித சலனமுமில்லாமல் இன்னொரு சகோதரனிடம் கண்டிப்புடன் நடந்து கொள்ள முடியும்!**

*ஆம், இந்த சகோதரன் ஜெபத்தில் தேவனைத் துதிக்கும்போது இருந்ததைப் போலவே, மற்றொரு சகோதரனைக் கடிந்துகொள்ளும் போதும் தேவனிடத்தில் நிலைத்திருக்கிறார்!*

**இயேசு முன் சென்ற சிலுவை பாதையில்,** *அதிகமான ஒழுங்கின் கட்டுப்பாட்டை கற்றுக்கொண்ட ஒரு மனிதனே, கர்த்தரை சிறந்த முறையில் சேவித்திட முடியும். நாம் எவ்வளவு அதிகம் உடைபடுகிறோமோ, அவ்வளவு அதிகமாய் கூர்மையான உணர்வுடையவர்களாய் இருப்போம்! நாம் எவ்வளவு அதிகம் நம் மனுஷீக ஜீவனை இழக்கிறோமோ, அவ்வளவு அதிகம் நாம் பிறருக்கு ஆவிக்குரிய மேன்மையானவைகளைத் தருவதற்கு பாத்திரவான்களாய் இருப்போம்! இந்த பாக்கியமே, உங்களுக்கும் அருளப்படுவதாக!*

*– வாட்ச்மன் நீ*

---

## 'எளியோர்க்கு' கர்த்தர் பலத்த அரண்!

*"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம்"(சங்.46:1-3).*

*இந்த அருமையான சங்கீதத்தை கருப்பொருளாக வைத்துத்தான் மார்டின் லூத்தர் என்ற பரிசுத்தவான்* **"எங்கள் தேவன் மகா அரணிப்பானதோர் கோட்டை"** *என்ற, கிறிஸ்தவ உலகம் போற்றும் ஒப்பற்ற கீதத்தை எழுதிவைத்தார்!*

*இந்த 46-ம் சங்கீதம், தலைமுறை, தலைமுறையாக மாந்தருக்கு ஆறுதலையும், சமாதானத்தையும் அள்ளிக் கொண்டுவந்து குவித்திருக்கிறது! யுத்த காலங்களிலும், கண்ணீர் கம்பலையான சூழ்நிலைகளிலும், வேதனையான நாட்களிலும், இந்த அற்புத சங்கீதம் மக்களை ஆண்டவரோடு கட்டி இணைத்து வந்திருக்கின்றது.*

*நோலா பட்டணத்தின் பக்திமானான* ***ஃபெலிக்ஸ்*** *என்பவரைப் பற்றியதோர் பழைய சரித்திரம் ஒன்று உண்டு! ஒரு சமயம் அவருடைய அஞ்ஞானிகளான சத்துருக்கள் அவரைக் கொல்லுவதற்காக கையில் ஆயுதங்களுடன் அவரைத் துரத்திக்கொண்டு ஓடி வந்தனர். ஓடி, ஓடி மிகவும் களைப்புற்றிருந்த* ***ஃபெலிக்ஸ்*** *ஒரு இருளான குகையினுள்*

*நுழைந்து தன்னை ஆண்டவருடைய பாதுகாவலின் கரத்தில் அர்ப்பணம் செய்து வீழ்ந்தார்! உடனே ஆண்டவர், குகையின் வாயிலில் ஒரு சிலந்திப் பூச்சியைத் துரிதமாக வலையைப் பின்னும்படிச் செய்தார். ஃபெலிக்ஸைத் தேடிவந்த அவருடைய சத்துருக்கள் குகையின் வாயிலில் சிலந்திப் பூச்சியின் வலையைக் கண்டதால், சந்தேகம் ஏற்படாது, குகையினுள் நுழையாமல் கடந்து சென்றனர்! இவ்விதமாக ஃபெலிக்ஸ் தேவனின் அற்புத பாதுகாவலால் உயிர் தப்பிப் பிழைத்தார்.*

**பின் நாட்களில் அந்த தேவ மனிதன் "தேவன் இல்லாத இடத்தில் இருக்கக்கூடிய அரணான மதில் ஒரு சிலந்திப் பூச்சியின் வலைக்கும், தேவனிருக்கக்கூடிய இடத்திலுள்ள ஒரு சிலந்திப் பூச்சியின் வலை, அரணான ஒரு மதில் சுவருக்கும் ஒப்பாகும்"** ("Where God is not, a mighty wall is like a spider's web. Where God is, a spider's web is like a mighty wall!") **எனக் கூறினார்.**

*நம்மால் முடிந்த அளவு நமது வீடுகளை நாம் பாதுகாக்கவே நாடுகின்றோம். ஆனால் சத்துரு நம்மைத் தாக்கும்போது, நமது முயற்சிகளெல்லாம் அவனுக்கு முன்பாக சிலந்திவலைக்கு ஒப்பானதாகவேதான் உள்ளது! மிகவும் வலிமையான மதில்சுவர்களும் கூட நம்மைத் தாக்கும் பாவத்திலிருந்தும், துன்ப துக்கத்திலிருந்தும் நம்மைப் பாதுகாக்க இயலுவதில்லை. நமது வீட்டு வாசற்படியில் வந்து நிற்கும் நம்முடைய துன்பத்தை, ஐசுவரியம் விரட்டியோட்ட முடியாது! எஃகு உருக்கினாலான இரும்போ, வெண்கலத்தாலான உறுதியான நமது தலைவாயிற் கதவோ, நமது வீட்டை நோக்கி வரும் மரணத்தை அப்பால் தடுத்து நிறுத்தி வைக்க இயலாது!*

*நமது சொந்தப் பிரயாசங்களும், சுய முயற்சிகளுமாகிய அனைத்தும், பயனற்ற சிலந்தி வலையேதான்! நமது கண் கலங்கிய நெருக்கடியான சமயத்தில், அவை யாதொன்றும் நமக்கு உதவாது!! ஆனால்,* **தேவன் நமக்கு அடைக்கலமானவராக இருப்பாரானால்,** *சத்துருவினிடமிருந்து வந்த வெள்ளப்பிரவாகமான நம் துன்பத்தை, ஒரு அற்பமான பெலனற்ற சிலந்தி வலை கூட அதிசயமாகப் பாதுகாக்கும் ஆற்றல் கொண்டதாயிருக்கும். நம்முடைய தற்காப்புக்காக, நாம் கட்டி நம்பியிருக்கும் நமது உறுதியான அரண்களை விட, ஆண்டவர் நமக்கு அளிக்கக்கூடிய* **தேவ சமாதானம்** *என்ற அடைக்கலத்தின் ஒத்தாசையால் திறந்த வெளியில் கூட, எவ்வித பயமுமின்றி மிகுந்த பாதுகாவலுடன் நாம் வாசம் செய்திட முடியும்! அல்லேலூயா!*

*– இமாச்சல் மிஷனெரி*

## ஓர் பரிசுத்த மாந்தன் பிறரையும் பரிசுத்தப்படுத்த நாடுவான்!

*சிறிய பாவங்களானாலும், அது வெறுத்து தள்ளப்பட்டு அழிக்கப்பட வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கின்றார் என்பதை ஒரு மெய்யான பரிசுத்த ஜீவிதன் மனதார உணர்ந்திருப்பான். நச்சுக் கண் பாம்பு, அது தனது முட்டைக்குள் சின்னஞ்சிறு புழு போன்ற குஞ்சாக இருக்கும்போதே, நசுக்கி கொல்லப்பட வேண்டும் என்பதை அவன் அறிந்திருக்கின்றான். பாபிலோனின் குழந்தைகள் (சிறு பாவங்கள்) கல்லின்மேல் மோதி அடிக்கப்படுகின்றார்களா? என்பதை தேவனும் நம்மை கவனித்து பார்த்துக்கொண்டே இருக்கின்றார்! ஆகவே, பெரிய பாவங்கள் மாத்திரமல்ல, சின்னஞ்சிறு பாவங்களும் கொல்லப்பட வேண்டும்! இல்லாவிட்டால் அவை நம் ஆத்துமாவைக் கொன்று போடும். தான் பெற்ற குஞ்சுகளே, தன் தாய் விரியன் பாம்பை கொன்று விடும் என்பார்கள்! தங்கள் மடியிலேவைத்து வளர்த்த சிறியபாவங்களே, திரளான ஆத்துமாக்களை நித்தியமாக கொலை செய்திருக்கின்றன!*

**மனிதனின் இருதயத்தில் பட்ட ஒரு சிறிய கத்திக் குத்து காயம், அவன் உயிரை பறித்துவிடுவதைப் போன்று, ஒரு சிறிய பாவமும் ஒரு மனிதனின் ஆத்துமாவை ஆக்கினைதீர்ப்புக்கு உட்படுத்திவிடும்!**

*'பொல்லாங்காய் தோன்றுகிற' யாவையும் விட்டு விலகவே, தேவன் தம்முடைய பரிசுத்த மக்களை கருத்துடன் எதிர்நோக்குகின்றார்.*

*இவ்வழி நடந்து வரும் ஓர் பரிசுத்த தேவ மனிதன், மற்ற மக்களையும் பரிசுத்தமுள்ளவர்களாக்குவதற்கு வெகுவாக பிரயாசப்பட்டு பாடு படுவான். ஒரு பரிசுத்த இருதயம், தான் மாத்திரம் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில் இருக்க வேண்டும் என்பதையோ அல்லது தான் மாத்திரம் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதையோ ஒருக்காலும் விரும்பாது!*

**தேவனுடைய வல்லமையையும், அவருடைய மாட்சி மகத்துவத்தையும், பரிசுத்தத்தின் இனிமையையும் ருசி கண்ட ஒரு மனிதன், எந்த வழிகளில் மற்றவர் களையும் அவற்றை அடையச் செய்யலாம் என்று கடுமையாக முயற்சிப்பான்!**

*தேனை உண்டு களித்த சிம்சோன், தன் தாய் தந்தையருக்கும் தன்னோடிருந்த மற்றவர்களுக்கும் கொடுத்தான் அல்லவா?* **பரிசுத்தம் என்ற மதுர தேனைப்** *பெற்ற மெய் தேவபிள்ளையின் காரியமும் அதுவே தான்! ஒரு பரிசுத்த ஆத்துமா, தான் பெற்ற பரிசுத்தத்தை தனக்குத் தானே சொந்தமான ஏகபோக உடமையாக்கிக்கொள்ள எக்காலத்தும் விரும்பாது! ஒரு சபையின் தலைவன் "***பரிசுத்த அக்கினி***" நிறைந்தவனாய் இருந்தால், சபை முழுவதும் அந்த பரிசுத்த அக்கினி பற்றியெரியவே வாஞ்சை கொண்டிருப்பான்!*

*– தாமஸ் புரூக்ஸ்*

## "பூரண அர்ப்பண" ஜெபம்!

**சி**லுவை அன்பின் நாதனே.....
*கல் நெஞ்சங்கள் உமக்களித்த*
*கல்வாரி கொடுமையால், திகலடைந்து*
*"கடுமை வாழ்வு வேண்டாம்!"*
*என மறுக்கும் எண்ணம், எனக்கு வேண்டாம்!*
**"உம் பாதையே என் தஞ்சம்!"** *என, சிலுவைநாதரின்*
*அந்த வீர பாதையில் தீவிரமாய் என்னை நடத்தும்!*
*அவரது பாதையில், அன்பும்....*
*அச்சமில்லா விசுவாசமும் பெற்றிடுவேன்!*
ஒ என் அன்பு தேவா......
என் நம்பிக்கை தளர்ச்சி ஒழியட்டும்,
உம் வாஞ்சையை அழித்திடும் குளிர் அவியட்டும்!
என் தெய்வமே, அக்கினிச் சுடரே, உமக்கே நான் இரையாகட்டும்!
என்னை முற்றிலும் எரித்து, உமக்கே சாம்பலாக்கும்! ஆமென்.

*– மிஷனெரி ஜிம் எலியட்*

---

## "நிலைத்திருக்கும் அன்பு" புது உடன்படிக்கையின் பொலிவு!

**தி**ராட்சைச் செடியில், நிலைத்திருக்கும் கொடி "மிகுந்த கனி கொடுக்கும்" என இயேசு கூறினார்! (யோவான் 15:5). "என்னுடைய அன்பில் நிலைத்திருங்கள்" எனவும் 9-ம் வசனத்தில் இயேசு கட்டளையிட்டார். ஆகவே, இயேசு மெய்யான திராட்சைச் செடியாய் இருக்கிறபடியால், அவரில் நிலைத்திருக்கும் கொடியாய், நாம் மிகுதியான பலன் தர வேண்டிய பங்கு "அன்பே" ஆகும்! நாம் கிறிஸ்துவுக்குள் வளருவது, அன்பின் வளர்ச்சியேயாகும்!

'ஜீவன்', அது பரிபூரண ஜீவனாய் வளரும்! அன்பு குறைந்தால், ஜீவன் கொஞ்சம் கொஞ்சமாய் குறைகிறது என்றல்லவோ நாம் எச்சரிக்கப்படுகிறோம். "உங்கள் அன்பானது, இன்னும் அதிக அதிகமாய் பெருக வேண்டும்" என்றே பிலிப்பியர் 1:9 போதிக்கிறது. நாம் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை பெறும்படி, நமக்காகத் தன்னையே தந்த இயேசுவின் அன்பு ஒருபோதும் மாறுவதில்லை (யோவான்.3:16). தேவன் அன்பாகவே இருக்கிறார்! நம்மை அன்புகூர்ந்த ஆண்டவரை, நாம் அன்புகூர்ந்து அவரது கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர்மீது காட்டும் நம் அன்பை

*நிரூபிக்கிறோம். இவ்வாறு* **நிலைத்திருக்கும் தெய்வ அன்பிலிருந்துதான் "பிறரை நேசிக்கும்" பிரதான அன்பு மலர்கிறது!** *நிலைத்திருக்கும் சகோதர அன்பே 'புதிய உடன்படிக்கையில்' பிரதானம்! (எபி.13:1,யோ.13:35).*

*பிறரால் ஏற்படும் பகை, விரோதம், நிந்தை, அவமானங்களே.... தெய்வ அன்பை நாம் அதிக அதிகமாய் பெற்றிடும் நேரம்! நோயிருக்கும் இடத்தில்தானே, மருந்துக்கும் வேலை உண்டு! சத்துரு ஒருவன் இருந்தால்தானே, நேசத்திற்கு பணி உண்டு!*

**'பகை' தோன்றியவுடனே, தனக்கு எதிரிடையான பகையை இயேசு சிலுவையிலே அறைந்தார்! (கொலோ.2:14,15). இவ்வாறு 'சிலுவை' நம் வாழ்வில் கிரியை செய்யும் போதுதான் "பரிசுத்தாவியானவர் தெய்வ அன்பை" நம் இருதயத்தில் ஊற்றுகிறார்! (ரோமர்.5:5). இந்த அன்பின் சுவிசேஷத்தை திரளான கிறிஸ்தவர்கள் அனுபவமாய் வாழாதது துயரமே!**

*அப்படி வாழ்ந்திருந்தால், ஒருவரையொருவர் அன்புகூரும் கிறிஸ்தவர்களை "இவர்களே இயேசுவின் சீஷர்கள்" என எல்லோரும் அறிந்திருப்பார்கள்! (யோவான்.3:35). அப்படியில்லையென்றால் "இந்த கிறிஸ்தவர்களும்" நம்மைப் போன்ற சாமானியர்கள்தான் என்ற துர்சாட்சி அல்லவோ ஏற்பட்டுவிடும்!*

*இயேசுவோ, அசட்டை பண்ணப்பட்டபோது, மனுஷரால் புறக்கணிக்கப்பட்ட போது.... அந்த,* **வறட்சியான நிலத்திலிருந்துதான் அவர், இளங்கிளையைப் போல,** *தேவனுக்கு முன்பாக துளிர்ந்து வளர்ந்தார்! என்ற ஆச்சரியமான நிகழ்ச்சி நடைபெற்றது! இதுவே, கிறிஸ்தவர்கள் விசுவாசித்திட வேண்டிய 'சுவிசேஷம்' என ஏசாயா 53:1-3 நமக்கு பூரிப்புடன் அறிவிக்கிறது! மனுஷனுக்குரிய பகை, பொறாமை, விரோதம், கோபம் போன்ற நமது சுய ஜீவியம் நமக்கு வெளியே கற்சாடியில் ஊற்றப்பட ஊற்றப்பட.....* **மதுரமான, பரிசுத்தாவியின் அன்பு** *நம் இருதயத்தில் ஊற்றப்பட்டு, அதை மொண்டு பிறருக்கு கொடுப்பதே, நம் எல்லோருக்கும் இயேசு பிரகடனம் செய்த மகிமையான சுவிசேஷம்! (யோவான் 2:7,8). எனவே, எங்கே அக்கிரமம் மிகுதியாகிறதோ, அங்கே அன்பு பெருகிடும் வாய்ப்பு ஏராளமாய் பெறுகிறோம். இதற்குப் பதிலாக 'அக்கிரமம் மிகுதியாக மிகுதியாக' அன்பு தணிந்து போனது.... எனக்கூறுவது கிறிஸ்தவம் அல்லவே அல்ல! (மத்.24:12). 'அன்பின் ஜீவியத்தில்' விழிப்புடன் வாழ்ந்து, சகோதர சிநேகத்தில் நிலைத்திருப்பதே இயேசு கொண்டு வந்த, புது உடன்படிக்கையின் பொலிவு! இந்த ஆண்டு முழுவதும், சிலுவையின் வழி நடந்து, நம் யாவர் இருதயத்திலும் தெய்வ அன்பின் சுவிசேஷம் ஓங்கிப் பெருகுவதாக! ஆமென்.*

*– T. ரத்தினகுமார்*

## கிறிஸ்துவுக்காய் பலியான
# எட்மண்ட் அரசன்!



( AD 841-870 )

கிழக்கு ஆங்கிலியா இராஜ்ஜியத்தின் அரசன் எட்மண்ட். கிறிஸ்துவின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர்! எட்மண்ட் அரசனுக்கு எதிர்ப்பாய் எழுந்த 'வைக்கிங்ஸ்' என்ற புறஜாதி இராணுவம் ஆங்கிலியாவின் மீது யுத்தம் தொடுத்தது. எட்மண்ட் அரசனோ தோல்வியை நோக்கி சென்று கொண்டிருந்தார். 'ஈவார்' என்ற தளபதி எட்மண்ட் அரசனை தாக்குவதற்கு கொலை வெறியோடு நெருங்கி வந்தான். அந்த நேரத்தில், எட்மண்ட் அரசன் தன்னுடைய அரசவை மண்டபத்தில் தனியே நின்று கொண்டிருந்தார்.

கொலை வெறியோடு அரசவை மண்டபத்தில் ஈவார் பிரவேசித்தவுடன், **தன்னுடைய முடிவு இரட்சகர் இயேசுவைப் போல் இருக்க வேண்டும்** என்ற தீவிர பக்தியில் கிறிஸ்துவின் அடிச்சுவட்டை மாதிரியாய் நிலை நிறுத்தினார். பட்டயத்தைக் கொண்டு கொடிய ரோமானிய வீரர்களை ஜெயித்திட எண்ணிய பேதுருவை, அன்று ஆண்டவர் தடை செய்தார்! என்ற நிகழ்ச்சியை மனதில் வைத்துக் கொண்டார். தன் கையில் வைத்திருந்த வாளை வீசி எறிந்து விட்டு நிராயுதபாணியாய் நின்றார்.

தெய்வ பயமற்ற ஈவார், எட்மண்டை கைது செய்து, தனி அறையில் வைத்து இரும்பு தடிகொண்டு அடித்தான். பின்பு எட்மண்டை ஓர் தோட்ட பண்ணைக்குள் இழுத்துச் சென்று ஒரு மரத்தில் கட்டினான். பெரிய சவுக்குகளை கொண்டு வந்து, அந்த வாரினால் அடித்தான். ஒவ்வொரு சவுக்கடியிலும் "என் இரட்சகர் கிறிஸ்துவே, என் முழுமையும் உமக்கே!" என, வானத்தை நோக்கி முழங்கினார். சூழ நின்று கொண்டிருந்த புறஜாதி படையினர்கள் கடுங்கோபம் கொண்டு அவர் உடம்பு முழுவதும் அம்புகளை எய்தார்கள். அவர் உடம்பு முழுவதும், முள்ளம் பன்றியைபோல் அம்புகள் தைக்கப்பட்டது. இந்த கொடிய நிலையிலும் கிறிஸ்துவை மறுதலிக்காத எட்மண்டின் தலையை வெட்டும்படி கூறி, அந்த தலையை அங்கிருந்த பண்ணை காட்டில் வீசி எறியும்படி கூறிவிட்டு அவ்விடம் விட்டு சென்றுவிட்டார்கள்.

அன்று மாலை, எட்மண்டோடு இணைந்திருந்த கிறிஸ்தவ விசுவாசிகள், அவர் கொலை செய்யப்பட்ட காட்டிற்கு வந்தார்கள். வெட்டப்பட்ட தலை எங்கே என தேடியபோது, தூரத்திலிருந்து லத்தீன் மொழியில் "Hic, Hic, Hic" - அதாவது "இங்கே, இங்கே, இங்கே" என ஓநாய்கள் கூப்பிட்டது. ஓநாய்கள் நடுவில் எட்மண்ட் தலை நல்ல பொலிவுடன் பத்திரமாய் இருந்தது. வீர வணக்கத்தோடு, அந்த விசுவாசிகள் அவரை அடக்கம் செய்தார்கள்.

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## வாலிபத்தை, இயேசுவுக்கே அர்ப்பணிப்பது நல்லது!

தன் அழைப்பைக் குறித்து பக்த்சிங் கூறும்போது, "எனது வாலிப பிராயத்தில், பக்த்சிங் ஆகிய நான் ஒரு இன்ஜினியராகிப் பணம் சம்பாதித்து, பணத்தை தேவனுக்கு கொடுப்பதே" எனது வாஞ்சையாய் கொண்டிருந்தேன். ஆண்டவரோ, "எனக்கு உன் பணம் வேண்டாம், நீதான் எனக்கு வேண்டும்! நீதான் எனக்கு வேண்டும்!!" என்றார். 1932ம் ஆண்டு ஏப்ரல் 4ம் தேதி, அதிகாலை 2.30 மணியளவில், ஆண்டவருடைய அழைப்பிற்கிணங்கி எனது முழு வாழ்க்கையையும் ஊழியத்திற்கே அர்ப்பணம் செய்தேன். ஆண்டவரோ "முதலாவது பஞ்சாப்பிலுள்ள உனது சொத்துக்கள் யாவற்றின் மேலுள்ள உனது உரிமையை நீ விட்டுவிட வேண்டும். ஒருபோதும் ஒரு மனிதனிடத்திலும் உன்னுடைய தேவைகளைப் பற்றிச் சொல்லவோ, ஆலோசிக்கவோ கூடாது. இரண்டாவதாக, எந்த ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனத்துடனும் ஒருபோதும் நீ சேர்ந்துகொள்ளக் கூடாது. மூன்றாவதாக, ஒருபோதும் உனது சொந்த திட்டத்தை தீட்டக்கூடாது!" என்பதே அந்த மூன்று நிபந்தனை எச்சரிப்புகள்! நான் இந்த மூன்று நிபந்தனைகளையும் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டேன்! அந்த நாள்முதல், ஆண்டவர் எனக்கு ஊழிய கதவுகளைத் திறக்கத் தொடங்கினார். ஆம், என் இன்ஜினியர் கல்விக்காக சென்றிருந்த கனடா தேசத்தின் பின்தங்கிய கிராமிய இடங்களுக்கு தேவன் என்னை அனுப்பி, பாவ மாந்தருக்கு விடுதலையின் செய்தியை அறிவிக்கும்படி செய்தார்!

இவ்வாறு என் ஊழியத்தின் ஒவ்வொருநாளும், வாரம் வாரமாக, மாதம் மாதமாக, வருஷம்தோறும் தமது வல்லமையான, திறமையுள்ள கரத்தால் தேவன் எவ்விதமாக என்னை நடத்தி வந்திருக்கின்றார் என்று நான் பரவசத்தோடு சொல்லிக்கொண்டே போகலாம். அன்றும், இன்றும், என்றும் "என்னை அழைத்தவர் உண்மையுள்ளவராய்" எனக்கு அவர் மாறாத வராகவே இருக்கிறார்!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்
Published and Owned by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by Jemi Printers, Madurai. Editor T.Rathnakumar, Madurai.